உ
சிவமயம்

ஸ்ரீ

ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

சிவத்தமிழ்ச்செல்வி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

அவர்களின்

78ஆவது பிறந்த நாள்

அறக்கொடை விழாவை முன்னிட்டு

வெளியிடப்பெற்றது

★
★★

07-01-2003

ஸ்ரீ

ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

சிவத்தமிழ்ச்செல்வி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

அவர்களின்

78ஆவது பிறந்த நாள்

அறக்கொடை விழாவை முன்னிட்டு

வெளியிடப்பெற்றது

*வெளியீடு :*

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

07 - 01 - 2003

# ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த
# திருப்பாவை

## ஸ்ரீ ஆண்டாள் அம்மையார் சரிதம்

ஸ்ரீ ஆண்டாள் பாண்டி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் நந்தவனத்துத் திருத்துளவப் பாத்தியில் இளங்குழந்தையாய் அவதரித்தார். அவர் பெரியாழ்வாருக்குத் திருமகளாய் வளர்ந்தார்; கோதை என்ற திருப்பெயர் பெற்றார். தம் தந்தையாரிடம் கல்வி கற்றுத் தேர்ந்தார். திருமாலிடம் அன்பு கொண்டு திகழ்ந்தார். தம் தந்தை வட பத்திரசாயிக்குத் தொடுத்த பூமாலையை அவர் அறியாவண்ணம் திருமாலிடம் கொண்ட காதலனினால் தான் முன்பு சூடி மகிழ்ந்து வந்தார். பின்பு ''சூடிக்கொடுத்த நாச்சியார்'' என்ற திருப்பெயர் வழங்கப் பெற்றார். கோபியர் பாவை நோன்பு நோற்றுக் கண்ணனை அடைந்தது போலத் தாம் திருமாலையே மணக்கப்போவதாக உறுதிகொண்டு மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளில் பாவை நோன்பைத் தொடங்கி முடித்துத் தம் தந்தையுடன் ஸ்ரீரங்கம்சென்று திருவரங்கப் பெருமானைக்கண்டு களித்து அவர் அருகில் அணைந்து பேரின்பமுற்றுத் திகழ்ந்தார்.



உ

# ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

### உய்யக்கொண்டார் அருளிச்செய்தது

அன்ன வயல்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதிகம் - இன்னிசையால்
பாடிக்கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்.

(ப-ரை.) அன்னம் - ஹம்சங்களால் நெருங்கிய, வயல் கழனிகளாற் சூழப்பட்ட, புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகையான, ஆண்டாள் - கோதைநாயகி, அரங்கற்கு ரங்காத் யக்ஷனுக்கு, பன்னு - ஆராய்ந்தருளிச் செய்த, திருப்பாவை - திருப்பாவையாகிய இந்தத் திவ்ய ப்ரபந்தத்தை, பல்-பல, பதிகம்-பத்துக்களாக, பன்னு-செய்து, இன்-இனிய இசையால் - ஸாமகாநத்தால், நல்-விலக்ஷணமான, பாமாலை பாடி - தமிழ் மாலையாகப்பாடி அநுஸந்தித்து, கொடுத்தாள் - ஸமர்ப்பித்தவளை, பூமாலை - திருமாலையை, சூடி - அணிந்து, கொடுத்தாளை -ஸமர்ப்பித்தவளை, சொல் - துதிப்பாயாக.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய் — நாடிநீ
வேங்கடவற்கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

(ப-ரை.) சூடி - புஷ்பமாலைகளை அணிந்து, கொடுத்த - ஸமர்ப்பித்த, சுடர் - உஜ்வலமான, கொடியே - கொடிபோல் பவளே, தொல்-அநாதியான, பாவை-திருப்பாவையை, பாடி திவ்யகானத்தாற் பாடி, அருள - க்ருபைபண்ண, வல்ல - ஸமர்த்தையான, பல் - பலவகைப்பட்ட வளையாய் - கங்கண விசேஷபரணங்களை யுடையவளே, நீ - தேவரீர், நாடி - உத்தேசித்து, வேங்கடவற்கு - திருவேங்கடத்தானுக்கு, என்னை - அடியேனை, விதி - விதிக்கவேணும், என்ற - என்று ப்ரார்த்தித்த, இம் - இத்தன்மையான, மாற்றம்திவ்யசுத்தியை, நாம் – அஸ்மதாதிகள், கடவா - அதிக்ரமிக்காத, வண்ணமே - உபாயத்தையே, நல்கு - க்ருபைபண்ணும்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (1)

(ப-ரை.) மார்கழி-மார்கழியென்கிற, திங்கள்-மாசத்தில், மதி-சந்திரனால், நிறைந்த-ஸம்பூரணமான, நல்நாள்-நல்ல தினத்தில், நீராட-தீர்த்தமாடுகிறதற்கு, போதுவீர்-வருகிற வர்கள், போதுமின் - வாருங்கோள், நேர்-விலக்ஷிணமான, இழையீர்-ஆபரணங்களையுடைய, சீர்-சம்பத்தினால், மல்கும் பரிபூரணமான, ஆய்ப்பாடி - திருவாய்ப்பாடியில், செல்வம் சம்பத்தையுடைய, சிறுமீர்நாள் - சிறுபெண்களே, கூர் - கூர் மையான, வேல்-வேலாயுதத்தையுடைய, கொடும்-க்ரூரமான தொழிலன் - வ்யாபாரமுடைய, நந்தகோபன் - நந்தகோபால னுடைய, குமரன் - குமரனானவனும், ஏர் - சௌந்தர்யத்தி னால், ஆர்ந்த - ஸம்பூர்ணமான, கண்ணி - நேத்ரங்களை யுடைய, யசோதை-யசோதைப் பிராட்டிக்கு, இளஞ்சிங்கம் இளஞ்சிங்கமானவனும், கார் - கார்மேகத்தைப் போன்ற, மேனி - திருமேனியை யுடையவனும், செங்கண் - புண்டரீ காக்ஷனும், கதிர் - சூர்யனையும், மதியம்-சந்திரனையும், போல்-ஒத்த, முகத்தான் - திருமுகமண்டலத்தை யுடைய வனுமான, நாரயணனே - ஸர்வஸ்வாமியானவனே, நமக்கே- வ்ரதோபவாஸிகளான நமக்கே, பறை - வாத்ய விசேஷங் களை, தருவான் - ப்ரஸாதிப்பான், பாரோர் - லோகத்தார் புகழ - கீர்த்திக்கும்படியாக, படிந்து - பொருந்தி, ஏல் ஓர் தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - நோன்பு முடிகிறது.

வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

(ப-ரை.) வையத்து - பூமியில், வாழ்வீர்காள் - ஸுகிக்கிற பாக்கியவாதிகளே, நாமும் - நாங்களும், நம் - எங்களுடைய, பாவைக்கு - நோன்புக்கு, செய்யும் - செய்யத்தக்க, கிரிசைகள் - க்ருத்தியங்களை, கேளீரோ - கேளுங்கோள்; பாற்கடலுள் - க்ஷீர சமுத்திரத்தில், பைய துயின்ற - லகுநித்திரை பண்ணுகிற, பரமன் - ஸர்வாதிகனான ஸ்ரீயபதியினுடைய, அடி - திருவடிகளை, பாடி - அநுஸந்தித்து, நெய் உண்ணோம் நெய்யைத் தின்னமாட்டோம், பால் உண்ணோம் - பாலைக் குடிக்கமாட்டோம்; நாட்காலே - அத்யந்த ப்ராதக்காலத்திலே, நீராடி - தீர்த்தமாடி, மையிட்டெழுதோம் - மையிடக் கடவர்களல்லோம், மலரிட்டுநாம் முடியோம் - புஷ்பத்தைச் சூடிக்கொள்ளக் கடவர்களல்லோம் ; செய்யாதன - செய்யத் தகாத காரியங்களை, செய்யோ ம் (யாம்) - செய்வதில்லை ; தீக்குறளை - பொல்லாத வார்த்தைகளை, சென்றோதோம் ஒருவரிடத்துச் சென்று காதில் உரையோம்; ஐயமும் உபகாரமும், பிச்சையும் - இரப்பவர்களுக்கு உணவும், ஆர்தனை

யும் - ஆகுமளவும், கைகாட்டி - கொடுத்து உய்யும் ஆறு உஜ்ஜீவநப்ரகாரத்தை. எண்ணி - அநுஸந்தித்து, உகந்து - ஸந்தோஷிக்கும்படியாக, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

(ப - ரை.) ஓங்கி - வளர்ந்து, உலகு லோகங்களை, அளந்த - அளவிட்ட, உத்தமன் - உத்தமனுடைய, பேர் - திருநாமத்தை, பாடி - அநுஸந்தித்து நாங்கள் - நாங்களும், நம் - நம்முடைய பாவைக்கு - நோன்புக்கு சாத்தி-ஒருப்பட்டு, நீராடினால் தீர்த்தமாடினால், தீங்கின்றி - அநாவ்ருஷ்டி தோஷமில்லாமல், நாடேல்லாம் - ஸமஸ்ததேசங்களும், திங்கள் - மாசத்துக்கு, மும்மாரி - மூன்றுமழை, பெய்து - வர்ஷித்து, ஓங்கு வளர்ந்த, பெருஞ்செந்நெல் - பருமனான நல்ல சம்பா நெற்பயிரின், ஊடு - நடுவே, கயல் - சேல்கெண்டைகள், உகள குதித்து விளையாட, பூங்குவளைப்போதில் - வீகஸிதமான நெய்தல் புஷ்பங்களில், பொறிவண்டு - புகரையுடைய வண்டுகள். கண்படுப்ப - நித்ரிக்க, தேங்காதே - அசைவன்றிக்கே புக்கு - ப்ரேவேசித்து, இருந்து - பூமியிற் படிந்திருந்து, சீர்த்த முலை - கனமான மடிகளை, பற்றி - பிடித்து, வாங்க - மீட்க குடம் - குடங்களை, நிறைக்கும், - பூரிக்கும், வள்ளல் - ஔதார்யத்தை யுடைய, பெரும் பசுக்கள் - ச்ரேஷ்டமான பசுக்கள், நீங்காத செல்வம் - என்றும் விலகாது சீர்மை. சம்பத்து நிறைந்து - ஸம்ருத்தமாம்படியாக, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகோ டார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

(ப-ரை.) ஆழி - கம்பீரமான, மழை - வர்ஷத்துக்கு, கண்ணா - நிர்வாஹனான, ஒன்றும் - அற்பமும், நீ - நீயும், கைகரவேல் - ஔதார்யம்தப்பாமல், ஆழியுள்புக்கு - ஸமுத்திரத்திலே ப்ரவேசித்து, முகந்துகொடு - ஜலபானம்பண்ணி, ஆர்த்து - சர்ஜித்து, ஏறி - ஆகாசமேறி, ஊழிமுதல்வன் - உக முடிவிலுள்ள ஆதிக்கடவுள் திருமால், உருவம்போல் - திருமேனியைப்போலே, மெய் - உடம்பு கறுத்து - கறுப்பாய், பாழி - கம்பீரமாய், அம் - சுந்தரமான, தோளுடை - தோள்களையுடையதான, பற்பநாபன் - பத்மநாபனுடைய, கையில் ஸ்ரீஹஸ்தத்தில், ஆழிபோல் - திருவாழிபோல, மின்னி - ஒளி செய்து, வலம்புரிபோல் - தக்ஷிணாவர்த்த ஸங்கம்போல், நின்று-சலியாமல், அதிர்ந்து-கோஷித்து, தாழாதே - தாமதியாதே, சார்ங்கமுதைத்த - ஸ்ரீ சார்ங்கத்தினாலே பிறந்த, சரமழைபோல் - சரவர்ஷம்போல, உலகினில் - லோகத்தில் வாழ - விருத்தியடையும்படியாக, நாங்களும் - நாங்களெல்லோரும், மகிழ்ந்து - ஸந்தோஷித்து, மார்கழி - மார்கழி மாசத்திலே, நீராட - தீர்த்தமாடும்படியாக, பெய்திடாய் - வர்ஷியாய், எல்ஓர் - தகுந்த ஒப்பந்த, எம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை

தூயோமாய் வந்துநாம் நூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினாற் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

(ப-ரை.) மாயனை - ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையனாய், மன்னு - பகவத்ஸம்பந்தம் நிலைபெற்ற, வடமதுரை மைந்தனை - த்வராகைக்கு நிர்வாஹனை, தூய பரிசுத்தமான, பெருநீர் - ஏராளமான ஜலமுடைய, யமுனைத் துறைவனை - யமுநாதீரவாஹியானவனை, ஆயர் - யாதவர்களுடைய, குலத்தினில் - ஜாதியில், தோன்றும் - ப்ரகாசிக்கிற அணிவிளக்கை - திருவாய்ப்பாடிக்கு மங்களதீபத்தை, தாயை - அசோப்தைப்பிராட்டியுடைய, குடல் - கர்ப்பத்தை விளக்கம்செய்த - ப்ரகாஸிப்பித்த, தாமோதரனை - கண்ண பிரானை, தூயோமாய் - பரிசுத்தராய், வந்து - விடைகொண்டு, நாம் - நாங்கள், தூயமலர்கள் - பரிசுத்தமான புஷ்பங்களை, தூய் - ஸமர்ப்பித்து, தொழுது - ஸேவித்து, வாயினால்பாடி - வாக்கினால் ஸ்தோத்ரம்பண்ணி, மனத்தினால் - மநஸ்ஸாலே, சிந்திக்க - த்யாநிக்க, போயபிழையும் - முன்செய்த தீவினையும், புகுதருவா நின்றனவும் - இனி நேரிடத்தக்க பாவங்களும், தீயினில் - நெருப்பிற்பட்ட, தூசாகும் - பஞ்சுபோல் ஆய்விடும்; செப்பு - அவன் திருநாமங்களை யநுஸந்திக்கும்படியாக, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

(ப - ரை ) புள்ளும் - பக்ஷிகளும், சிலம்பினகாண் - கூவிப் போகா நின்றனகாண், புள்ளரையன் - பெரிய திருவடிக்கு ஸ்வாமி யானவனுடைய, கோயிலில் - கோயிலிலே, வெள்ளை விளி - வெளுப்பாய் கோஷிக்கிற, சங்கின் - சங்கத்தினுடைய, பேரரவம் - மஹா கோஷத்தை, கேட்டிலையோ - கேட்க வில்லையோ ? பிள்ளாய் - சிறுபெண்ணே, எழுந்திராய் - எழுந்திரு; பேய் - பூதனையினுடைய, முலை - ஸ்தநங்களில், நஞ்சு - விஷத்தை, உண்டு - அமுதுசெய்து, கள்ள - வஞ்சக னான, சகடம் - சகடாசுரனை, கலக்கு அழிய - சேர்க்கை நிலைகுலைய, காலோச்சி - ஸ்ரீபாதத்தாலே ஸ்பரிசித்து, வெள்ளத்து - க்ஷீரார்ணவத்திலே, அரவில் - திருவநந்தாழ் வான்மேலே, துயில் - யோக நித்திரையை, அமர்ந்த - விரும் பிய, வித்தினை - காரணபூதனை, உள்ளத்துக்கொண்டு - பரிசுத்தாந்தக் கரணத்திற் கொண்டு, முநிவர்களும் - மநந சீலரும், யோகிகளும் - யோகாப்பியாசம் பண்ணுமவர்களும், மெள்ள எழுந்து - அசையாமல் நித்திரை விட்டெழுந்து, அரியென்ற - ஹரிஹரி என்கிற, பேரரவம் - மஹாகோஷங் கள், உள்ளம் - ஹ்ருதயங்களிலே, புகுந்து - ப்ரவேசித்து, குளிர்ந்து - குளிரும்படி, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பா வாய் - எமது நோன்பு முடிகிறது.

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தம் கலந்து
பேசினபேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய். (7)

(ப - ரை.) கீசுகீசென்று - கீசுகீசு என்று, எங்கும் - ஸர்வ திக்குகளிலேயும், ஆனைச்சாத்தம்-பரத்வாஜபக்ஷிகள், கலந்து- ஸம்ஸ்லேஷித்து, பேசின - பேசிய, பேச்சு - வார்த்தைகளி னுடைய, அரவம் - சப்தங்களை, கேட்டிலையே - கேட்க

வில்லையோ? பேய்ப்பெண்ணே - பேய்ப்பிள்ளாய், காசும் - அச்சுத்தாலியும், பிறப்பும் - ஆமைத்தாலியும், கலகலப்பு - கலகலவென்று சப்திக்க, கைபேர்த்து - கைகளைப் போர்த்து வாசம் - பரிமளத்தால், நறும் - பரிமளிக்கிற, குழல் - அளக பாரங்களையுடைய, ஆய்ச்சியர் - கோபிகாஸ்திரீகள், மத்தினால் - மத்தாலே, ஓசைபடுத்த - கடையப்பட்ட, தயிர்-தயிரின், அரவம் - கோஷம், கேட்டிலையோ - கேட்க வில்லையோ?, நாயகம் - ஸ்வாமியான, பெண்பிள்ளாய் - பெண்பிள்ளை, நாராயணன் - ஸ்ரீயஃபதியினுடைய, மூர்த்தி மூர்த்தியான, கேசவனை - கேஸஹந்தாவான க்ருஷ்ணனை, பாடவும் - பாடிவரவும், நீ - நீதான், கேட்டே - கேட்டும், கிடத்தியோ - உறங்குகிறாயோ? தேசமுடையாய் - தெளிவை யுடைத்தானவளாய், திற - (திருவாசல்) திறப்பாயாக; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமற் காத்துன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

(ப - ரை.) கீழ் - கீழ்த்திக்கில், வானம் - ஆகாயம், வெள் ளென்று-வெளுத்தவென்று, எருமை-மஹிஷங்கள், சிறுவீடு-சிறிது விடுதலாய், மேய்வான் - (பனிப்புல்லை) மேயும் பொருட்டு, பரந்தனகாண் - ஸ்வேச்சையாக வனங்களிலே வர்த்தித்தது; மிக்குள்ள-உன்னை யொழிந்த, பிள்ளைகளும்-பெண்பிள்ளைகளும், போவான்-போகிறதற்காக, போகின் றாரை - போகின்றவர்களை, போகாமல் - போகாதபடிக்கு, காத்து - தடுத்து, உன்னைக் கூவுவான் - உன்னை அழைக்க வேண்டி, வந்து - நாங்களே வந்து, நின்றோம். - வாசலிலே நிற்கிறோம், கோதுகலமுடைய-களதூஹலமுடைய, பாவாய்

- பெண்பிள்ளாய், எழுந்திராய் - எழுந்திரு; பாடி - ஸ்ரீ க்ருஷ்ணன் கல்யாண குணங்களை யநுசந்தித்து, பறை - வாத்திய விசேஷத்தை, கொண்டு - எடுத்துக்கொண்டு, மா - குதிரை வடிவுகொண்டு வந்த கேஸி என்பவனது, வாய் - வாயை, பிளந்தானை - இருபிளவாகக் கீண்டவனை, மல்லரை - சாணூராதி மல்லர்களை, மாட்டிய - ஸம்ஹரித்த, தேவாதி தேவனை தேவர்களுக்குத் தேவனானவனை, சென்று - சந்நிக்குச் சேர்ந்து, நாம் - நாமெல்லோரும், சேவித்தால் - ப்ரபத்தி பண்ணினால், ஆவாவென்று - ஐயோ ஐயோ வென்று, ஆராய்ந்து - விசாரித்து அருள் - க்ருபை பண்ணுவான்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய்-எமது நோன்பு முடிகிறது.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
 தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
 மாமீ ரவளை யெழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ வன்றிச் செவிடோ அனந்தலோ
 ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
 நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

(ப - ரை.) தூ-ச்லாக்யமான, மணி-மாணிக்க கசிதமான, மாடத்து - மாளிகையில், சுற்றும் - சுற்றிலும், விளக்கு -திருவிளக்குகள், எரிய - ஜ்வலிக்க, தூபம் - சாம்ப்ராணி தூபமானது, கமழ - பரிமளிக்க, துயிலணைமேல்-ஹம்ஸ தூளிகா தல்பத்திலே, கண்வளரும் - ஸயநிக்கும், மாமான் மகளே - அம்மான் பெண்ணே, மணிக் கதவம் - மாணிக்கக் கதவினுடைய, தாள் திறவாய் - பூட்டை நீ திறப்பாயாக; மாமீர்-அம்மாமீர், அவளை-அந்தப் பெண்பிள்ளையை, எழுப்பீரோ எழுப்பப் போகாதோ? உன்மகள்தான் ஊமையோ - உன் மகள் வாக்கிந்த்ரிய மில்லாதவளோ? அன்றி - அல்லாமல், செவிடோ - ஸ்ரோத்ரேந்த்ரிய மில்லாதவளோ? அனந்தலோ-அபரராத்திரியில் நித்திரையோ? ஏமம் - காவலிலே ப்ரவேசித்தனளோ? பெருந்துயில் - பெரிய நித்திரையோ? மந்திரப்

பட்டாளோ - மந்திரித்தாருண்டோ? மாமாயன் - ஆச்சர்ய குண சேஷ்டிதன், மாதவன் - ஸ்ரீய:பதி, வைகுந்தன் - வைகுந்தநாதன், என்றென்று - என்று சொல்லிச் சொல்லி, நாமம் - திருநாமம், பலவும் - ஸஹஸ்ர நாமங்களும், நவின்று - சொல்லுவோம்; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

**நோற்றுச் சுவர்கம் புகுகின்ற வம்மனாய்**
**மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்**
**நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்**
**போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்**
**கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்**
**தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ**
**ஆற்ற அனந்த லுடையாய் அருங்கலமே**
**தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)**

(ப - ரை.) நோற்று - நோன்பு நோற்று, சுவர்க்கம் - ஸ்வர்க்கத்திலே, புகுகின்ற - ப்ரவேசிக்கத்தக்க, அம்மனாய் - ஸ்வாமியானவளே? மாற்றமும் - மாறுத்தரமும், தாராரோ - சொல்லாரோ, வாசல் - கதவை, திறவாதார் - திறவாதவர்கள், நாற்றம் - பரிமளத்தையுடைய, துழாய் - திருத்துழாய்மாலையை, முடி - திரு முடியினுடைய, நாராயணன் - நாராயணனானவன், நம்மால் - நம்மால், போற்ற - ஸ்தோத்ரம் செய்யப்பட்ட, பறை - புருஷார்த்தத்தை, தரும் - கொடுக்கிற, புண்ணியனால் - புண்யாத்மாவாலே, பண்டொரு நாள் - பூர்வகாலத்திலே, கூற்றத்தின் - மிருத்துவினுடைய, வாய் - வாயிலே, வீழ்ந்த - பட்ட, கும்பகரணனும் - கும்பகர்ணனும், உனக்கே - உனக்குத் தானே, சோற்று - அபஜயத்தை யடைந்து, பெருந்துயில்தான் - பெரிய நித்திரையை, தந்தானோ - கொடுத்தானோ? ஆற்ற - அதிகமாக, அனந்தலுடையாய் - நித்திரையை யுடையவளே, அருங்கலமே - எங்கள் கோஷ்டிக்கு ஆபரணமானவளே, தேற்றமாய் வந்து - தெளிவுண்டாய் வந்து, திற - கதவைத் திறப்பாயாக; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார்திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றா வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

(ப-ரை.) கற்று - கன்றாநின்ற, கறவை - பசுக்களினுடைய, பல - அநேகங்களாயிருக்கிற, கணங்கள் - ஸமூஹங்களை, கறந்து - பால் பீச, செற்றார் - ஸத்துருக்களினுடைய, திறம் – பலம், அழிய - அழியும்படியாக, சென்று - தண்டயாத்திரைபண்ணி, செரு - யுத்தத்தை, செய்யும் - பண்ணும்படியான, குற்றம் - அக்ருத்யம், ஒன்றில்லாத - ஒன்றுமில்லாத, கோவலர்தம் - கோபால வம்சத்திற்கு, பொற்கொடியே - ஸ்ப்ருஹணீயமானவளே, புற்றரவல்குல் - புற்றிலேயிருக்கிற ஸர்ப்பத்தைப்போன்ற நிதம்பப்ரதேசத்தையுடையவளே, புனமயிலே - காட்டிலிருக்கிற மயில் இறகு போன்ற அளகபாரத்தை யுடையவளே. போதராய் - வாராய், சுற்றத்து - பந்துஜனமான, தோழிமார் - பெண்கள், எல்லாரும் வந்து - எல்லாருமாய் வந்து, நின்முற்றம் புகுந்து - உன் அகத்து வாசலிலே ப்ரவேசித்து, முகில்வண்ணன் - நீலமேகச்யாமளனான ஸர்வேச்வரனுடைய, பேர் - திருநாமத்தை, பாட - பாடிக்கொண்டுவர, சிற்றாதே - அசங்காதே, பேசாதே - பேசாமல், செல்வம் - பகவதநுபவைச்வர்ய முடைய, பெண்டாட்டி நீ - பெண்ணே நீ, எற்றுக் குறங்கும் பொருள் - நித்திரிக்கிற அபிப்பிராயந்தானென்ன? ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்

சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

(ப-ரை) கனைத்து - கூப்பிட்டுக்கொண்டு, இளம் கற்று எருமை கன்றுக்கிரங்கி · தன்கன்றின் விஷயத்தில் தயையுண்டாசி, நினைத்து - அவற்றை நினைத்து, முலைவழியே - ஸ்தநபாரங்களாலே, நின்றுபால்சோர - பால் இடைவிடாமல் பெருக, நனைத்து - ஈரமாக்கி, இல்லம் - க்ருஹமெல்லாம், சேறாக்கும் - சேறாகப்பண்ணும், நல் செல்வன் - நல்ல ஸம்பத்துடையவனுடைய, தங்காய் - ஸோதரியானவளே, பனி - பனியானது, தலைவீழ - தலைமேலே வீழ, நின்வாசல் கடைபற்றி - உன்வாசல்படியைப் பிடித்துக் கொண்டு, சினத்தினால் - கோபத்தினால், தென்னிலங்கை - அழகிய இலங்கைக்கு கோமானை - ராஜாவான ராவணனை, செற்ற - ஸம்ஹரித்த, மனத்துக்கு இனியானை - மநஸ்ஸுக்கு போக்யதாதனான சக்கரவத்தி திருமகனை, பாடவும் - பாடச்செய்தேயும், நீ வாய் திறவாய் - நீ வாயைத் திறவாமலிருக்கிறாய், இனித்தான் எழுந்திராய் - இனியாயினும் நித்திரையை விட்டெழுந்திருப்பாய், ஈதென்ன பேருறக்கம் - இது என்ன பெரிய நித்திரை, அனைத்தில்லத்தாரும் அறிந்து - எல்லாப் பெண்களுமறிந்தார்கள், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழ முறங்கிற்றுப்
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

(ப - ரை.) புள்ளின்வாய் கீண்டானை - பகாஸுரனுடைய வாயைப் பிளந்தவனாய், பொல்லா - துஷ்டனான, அரக்கனை - ராக்ஷஸனான ராவணனை, கிள்ளிக் களைந்தானை - த்ருணப்ராயமாக கிள்ளி எறிந்த சக்கரவர்த்தி திருமகனுடைய, கீர்த்திமை - வீர சரிதத்தை, பாடிப் போய் - பாடிக்கொண்டு போய். பிள்ளைகளெல்லாரும் - எல்லாப் பெண்பிள்ளைகளும், பாவைக்களம் - ஸம்கேதஸ்தலம், புக்கார் - பிரவேசித்தார்கள், வெள்ளி எழுந்து - சுக்ர னுதயமாய், வியாழம் - ப்ருஹஸ்பதி, உறங்கிற்று - அஸ்தமித்தான், புள்ளுஞ் சினம்பினகாண் - பக்ஷிகளுங் கூப்பிடுகிறது, போதரிக்கண்ணினாய் - புஷ்பத்திலே யிருக்கிற வண்டுக்கு சத்ருசமான நேத்ரங்களையுடையவளே, குள்ளக்குளிர - அத்யந்தம் குளிரும்படியாக, குடைந்து - அலகாஹித்து, நீராடாதே - தீர்த்தமாடாதே, பள்ளிக்கிடத்தியோ - சயநத்தில் நித்ரிக்கிறாயோ, பாவாய்நீ - அழகிய பெண்ணே நீ, நன்னாளால் - நல்லதினத்திலே, கள்ளம்தவிர்ந்து - கபடத்தை விட்டு, கலந்து - எங்களோடே கூடவந்து கலக்க வேண்டும், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

(ப - ரை.) உங்கள் - உங்களுடைய, புழைக்கடைத் தோட்டத்து - புழைக்கடைத் தோட்டத்தின்கண், வாவியுள் - கிணற்றிலே, செங்கழுநீர் - செங்கழுநீர் புஷ்பமானது, வாய் நெகிழ்ந்து - முகவிகவிழிதமாய், ஆம்பல்-நீலோத்பலபுஷ்பமானது, வாய் கூம்பினகாண்-முகுளிதமாய்த்து, செங்கல்பொடி-காவிப்பொடி துவைத்த, கூறை-காஷாயாம்பரதரம்பண்ணி, வெண்பல் - ஸ்வேத தந்தங்கதளயுடைத்தான, தவத்தவர் -

தபோவேஷரான ஸந்யாஸிகள், தங்கள் - தங்களுடைய, திருக்கோயில் - ஆலயங்களில், சங்கிடுவான் - குச்சிகொண்டு வாங்க, போகின்றார் - போகாநின்றனர். எங்களை - எங்களை, முன்னம் - முன்னதாக, எழுப்புவான் - எழுப்பு கிறதற்காக, வாய்பேசும் - வார்த்தைசொன்ன, நங்காய் - பூர்ணமானவளே, எழுந்திராய் - எழுந்திருப்பாய், நாணாதாய் - வெட்கமில்லாதவளே, நாவுடையாய் - (அன்றிக்கே) வாயாடியானவளே, சங்கொடு - ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தோடு, சக்கரம் - திருவாழியையும், ஏந்தும் - தரித்துக்கொண்டிருக்கிற, தடக்கையான் - கம்பீரமானஹஸ்தங்களையுடைய, பங்கயக் கண்ணானை - புண்டரீகாக்ஷனை, பாட - பாடுகிறதற்கு எழுந்திராய், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

எல்லே யிளங்கிளியே யின்னம் உறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடைய
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

ப - ரை.) எல்லே - (எடி) ஏஹோவாராய், இளங்கிளியே பால்யத்தை யுடைத்தான கிளிபோல பேசுகிறவளே, இன்ன முறங்குதியோ - இன்னமும் நித்ரிக்கிறாயோ, சில்லென்றழை யேல் மின் - சிலுக்கு சிலுக்கென்றழைக்கவேண்டா, நங்கை மீர் - பூர்ணமானவர்களே, போதருகின்றேன் - வருகிறேன், வல்லை - சாமர்த்தியமானவளே, உன்கட்டுரைகள் - உன்னு டைய சமத்கார வார்த்தைகளையும், பண்டே - பூர்வமே, உன்வாயறிதும் - உன் வாயாடித் தனத்தையும் நாங்களறிந் திருக்கிறோம், வல்லீர்கள் - ஸமர்த்தர்கள், நீங்களே - நீங்களேயாகவேணும், நானேதானாயிடுக - நான்தானேயா யிருக்கட்டும், ஒல்லை - சீக்கிரமாக, நீபோதாய் - நீ வாராய், உனக்கென்னவேறுடையை - உனக்கு வேறு அநுபவந்தா

னென்ன, எல்லாரும் - எல்லாப் பெண்களும், போந்தாரோ - வந்தார்களோ? போந்தார் - வந்தார்கள், போந்தெண்ணிக் கொள் - வந்து கணித்துக்கொள், வல்லானை கொன்றானை - பலத்தை யுடைத்தான குவலயாபீடமென்கிற யானையை ஸம்ஹரித்தவனை, மாற்றாரை - சத்ருக்களினுடைய, மாற்று - பலத்தை, அழிக்க - போக்கடிக்க, வல்லானை - ஸமர்த்தனான, மாயனை - ஆச்சர்யகுண சேஷ்டிதமுடைய ஸர்வேச்வரனை, பாட - பாடும்பொருட்டு வாராய், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே கொடித்தோன்றுந் தோரண
வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மாநீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

(ப-ரை) நாயகனாய் நின்ற ஸ்வாமியாயிருக்கிற, நந்தகோபனுடைய - நந்தகோபனுடைய, கோயில்காப்பானே - திருமாளிகையைக் காவல்காக்கிறவனே, கொடிதோன்றும் - ஜயத்வஜம் கட்டின, தோரண - மங்களார்த்தமாக தோரணங்கள் கட்டின; வாயில் - திருவாசலை, காப்பானே - காக்குமவனே, மணிக்கதவம் - மாணிக்கக் கதவினுடைய, தாள் - பூட்டை, திறவாய் - திறக்கக் கடவாய், ஆயர் - இடையருடைய, சிறுமியரோமுக்கு - பெண்பிள்ளைகளான எங்களுக்கு, அறைபறை - வாத்ய விசேஷமான கைங்கர்யத்தைத் தருகிறோமென்று, மாயன் - குண சேஷ்டிதனான, மணிவண்ணன் - மாணிக்கவர்ணனான க்ருஷ்ணன், நென்னலே - நேற்றே, வாய்நேர்ந்தான் - அருளிச் செய்தான்; தூயோமாய் வந்தோம் - பரிசுத்தராய் வந்தோம்; துயிலெழப்

பாடுவான் - நித்திரையை விட்டெழுந்திருக்கும்படி பாட வந்தோம்; வாயால் - வாக்காலே, முன்ன முன்னம் - முதல் முதல், மாற்றாதே - தடுக்காதே. அம்மா - ஸ்வாமி! நீ - நீ, நேச - ஸ்நேஹத்தையுடைய, நிலைக்கதவு - நிலையிலே யிருக்கிற கதவை, நீக்கு - திறக்க வேண்டும், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

**அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்**
**எம்பெருமான் நந்தகோ பாலா வெழுந்திராய்**
**கொம்பனர்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே**
**எம்பெரு மாட்டி யசோதா யறிவுறாய்**
**அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த**
**உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்**
**செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா**
**உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (17)**

**(ப-ரை.)** அம்பரமே - வஸ்திரமும், தண்ணீரே - குளிர்ந்த ஜலமும், சோறே - அன்னமும், அறஞ்செய்யும் - தாநம்பண்ணுகிற, எம்பெருமான் - எங்களுக்கு ஸ்வாமியான, நந்த கோபாலா - ஸ்ரீ நந்த கோபரே, எழுந்திராய் - எழுந்திரும், கொம்பனார்க்கெல்லாம் - பெண்களுக்கெல்லாம், கொழுந்தே - ப்ரதானமானவளே, குலவிளக்கே - இடையர் குலத்துக் கெல்லாம் தீபம்போலே ப்ரகாசமானவளே, எம் பெருமாட்டி - எங்களுக்கு ஸ்வாமிநியானவளே, யசோதாய் - யசோதையே, அறிவுறாய் - உணர்த்தாய்: அம்பரம் - ஆகாயத்தை, ஊடறுத்து - இடையறுத்து, ஓங்கி உலகளந்த - விச்வரூபங்கொண்டு உலகத்தை யளந்த உம்பர்கோமானே - தேவாதிதேவனே, உறங்கா தெழுந்திராய் - நித்திரியாமலெழுந்திருக்காய்; செம் - ரத்தினமயமான, பொன்கழல் - ஸ்ப்ருஹணீயமான விருதுவண்டயங்களள, அடி - திருவடிகளுடைய, செல்வா - ஸம்பத்தையுடைய, பலதேவா - பலராமனே, உம்பியும் - தம்பியும், நீயும் - நீயும், உறங்கேல் - நித்ரை போகாமலெழுந்திருக்க வேண்டும், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழுங்குழலீ கடை திறவாய்
வந்தெங்கும் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மதிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

(ப-ரை.) உந்து மதகளிற்றன் - ஸ்ரவிக்கிற மலஜலத்தையுடைய கஜத்தைத் தள்ளும் பலத்தைக் கொண்டிருக்கிற, ஓடாத - தோலாத, தோள்வலியன் - புஜபலமுடைய, நந்தகோபாலன - நந்தகோபருடைய, மருமகளே - நாட்டுப் பெண்ணான, நப்பின்னாய் - நப்பின்னைப்பிராட்டி, கந்தங் கமழும் - அத்யர்தம் பரிமளத்தைக்கொண்டு வீசுகிற, குழலீ அளகபாரதத்தையுடையயவளே, கடை - தாளை, திறவாய் திறக்கக்கடவாய்; வந்து ஸ்வஸ்நானத்தில் நின்றும் புறப்பட்டு வந்து, எங்கும் - ஸர்வதிக்குகளிலும், கோழியழைத்தனகாண் கோழிகூவுகிறதுகாண், மாதவிப்பந்தல்மேல் - வஸந்தகால மல்லிகைப் பந்தல்மேல், பலகால் - அநேகதரம், குயில் - கோகிலங்களுடைய, இனங்கள் - ஸமூஹிங்கள், கூவினகாண் கூப்பிடுறதுகாணும், பந்து - செண்டினாலே, ஆர் - பூர்ணமான, விரலி - விரல்களையுடையவளே, உன் மைத்துனன் உன்பார்த்தாவினுடைய, பேர்பாட - திருநாமத்தைப் பாடுகைக்கு, செந்தாமரைக்கையால் - சிவந்ததாமரைக்கு ஸத்தருசமான கையாலே, சீரார் - சௌந்தர்ய பூரிதமான, வளை - கங்கணங்கள், ஒலிப்ப - கோஷிக்க, மகிழ்ந்து - ஸந்தோஷித்துக்கொண்டு, வந்து - நீ தானேவந்து, திறவாய் - கதவைத் திறக்க வேண்டும், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய்- எமது நோன்பு முடிகிறது.

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நம்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்

மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

(ப-ரை.) குத்துவிளக்கெரிய - குத்துவிளக்கு ப்ரகாசிக்க கோட்டுக்கால் - தந்தக்கால்களையுடைய, கட்டில்மேல் - தல்பத்தின் மேலே, மெத்தென்ற - மிருதுவான, பஞ்ச - அழகு முதலிய அஞ்சுகுணங்களையுடைத்தான, சயனத்தின்மேல் - திருப்பள்ளியிலே, ஏறி - ஏறியிருந்து, கொத்தலர் பூங்குழல் - கொத்துக்களால் விகஸிக்கப்பட்ட புஷ்பங்களை யுடைத்தான கேசங்களையுடைய, நப்பின்னை - நப்பின்னை பிராட்டியினுடைய கொங்கைமேல் - திருமுலைத்தடங்கள் மேலே, வைத்துக் கிடந்த - வைத்துக்கொண்டு கிடக்கிற, மலர் - விகஸிதமான மார்பா - வக்ஷஸ்தலத்தை யுடையவனே! வாய் திறவாய் - திருவாய் மலர்ந்தருளாய்! மைத்தடங்க கண்ணினாய் - மையணிந்த விசாலமான, கண்களையுடையவளே, நீ - நீ, உன் மணாளனை - உன்னுடைய நாதனை, எத்தனைபோதும் - ஒரு அற்பகாலமாகிலும், துயிலெழ - நித்திரையினின்று மெழுந்திருக்க ஒட்டாய்காண் - ஸம்மதிக்கிறதில்லை, எத்தனையேலும் - அற்பகாலமும், பிரிவு - அவனைப் பிரிந்து, ஆற்றகில் - ரயால் ஸஹிக்கமாட்டாமலிருக்கிறாய், ஆல் - ஆச்சர்யம், தத்துவமன்று - வ்யவஹாரமன்று, தகவு அன்று - ஸ்வரூபமன்று, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்குங் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

(ப - ரை.) முப்பத்து மூவர் - முப்பத்து முக்கோடி, அமரர்க்கு - தேவர்களுக்கும், முன்சென்று - முன்பாக தண்டயாத்திரை பண்ணி, கப்பம் - கப்பத்தை, தவிர்க்கும் - போக்குகிற கலியே - பலஸாலியே, துயிலெழாய் - நித்திரையை விட்டெழுந்திரு; செப்பமுடையாய் - க்ஷேமத்தையுடையவனே, திறலுடையாய் - அவர்கள் விரோதிகளை யடக்கும் வல்லமையுடையவனாய், செற்றார்க்கு - சத்துருக்களுக்கு, வெப்பம் - பயத்தை, கொடுக்கும் - தருகிற, விமலா - நிர்மலனே, துயிலெழாய் - நித்திரையை விட்டெழுந்திரு, செப்பு - கலசத்துக்கு, அன்ன - ஸத்ருஸமான, மென் - ம்ருதுவான, முலை - திருமுலைத் தடங்களையுடைய, செவ்வாய் - சிவந்த திருப்பவளமுடைய, சிறு - ஸூக்ஷ்மமான, மருங்குல் - மத்ய ப்ரதேசமுடைய, நப்பின்னை நங்காய் - நப்பின்னைப் பிராட்டியென்னுந் திருநாமமுடைய பூர்ணையான, திருவே - ஸ்ரீயே, துயிலெழாய் - நித்திரையை விட்டெழுந்திராய், உக்கமும் - திருவாலவட்டமும், தட்டொளியும் - வெண்கலக்கண்டியும், தந்து - கொடுத்து, உன்மணாளனை - உன்னுடைய நாயகனை, இப்போதே - இந்த வேளையிலே, எம்மை - எம்மை நீராட்டு - நீராட்டி வைக்கக் கடவாய், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்ற முடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்றா ருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம்வந்தோம்புகழ்ந்தேலோரெம்பாவாய்.

(ப - ரை.) ஏற்ற - ஏந்தின, கலங்கள் - குடங்கள், எதிர் பொங்கி-எதிராகப் பொங்கி, மீதளிப்ப - மேலே வழிந்து வர, வரமாற்றாதே - இடை விடாமல், பால் சொரியும் - பாலைப்

பீச்சும், வள்ளல் - கொடுக்குந் தன்மையுடைய, பெரும் - பெரிய, பசுக்கள் - ஆக்கள், ஆற்ற - அதிகமாக, படைத்தான் -ஸம்பாதித்தவனுடைய, மகனே—பிள்ளையானவனே, அறிவு தெளிவோடே எழுந்திராய், ஊற்றமுடையாய் - ஆச்ரிதபக்ஷ பாத முடையவனே, பெரியாய் - ஸர்வஸ்வாமித்வபரனான வனே, உலகினில் - பூமியிலே, தோற்றமாய் நின்ற - திருவவ தரித்த, சுடரே - தேஜோமயனே, துயிலெழாய் - படுக்கை யினின்று மெழுந்திரு; மாற்றார் - சத்ருக்கள், உனக்கு உமக்கு, வலிதொலைந்து - பராஜிதராய், உன் வாசற் கண் - உன்னுடைய அரண்மனைவாசலிலே, ஆற்றாது - பொறுக்கமாட்டாதே, வந்து - எல்லாரும் வந்து, உன் அடி பணியுமாபோலே, தேவரீர் திருவடிகளுக்குக் கைங்கர்யம் பண்ணுமா போலே, போற்றி - மங்களாசாஸநம் பண்ணி யாம் வந்தோம் - யாம் வந்தோம், புகழ்ந்து - ஸந்தோஷித்து துக்கொண்டு, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் எமது நோன்பு முடிகிறது.

அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ
திங்களு மாதித் தியனு மெழுந்தாற்போல்
அங்க ணிரண்டும்கொண் டெங்கண்மேல் நோக்குதியேல்
எங்கண்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய் (22)

(ப-ரை.) அங்கண் - அழகான ஸப்தத்வீபங்களை யுடைய மாஞாலத்து - மஹாப்ருதிவியில், அரசர் - ராஜர்கள், அபி மான பங்கமாய்வந்து - பக்தாபிமானிகளாய் வந்து, நின் - தேவரீருடைய, பள்ளிக்கட்டிற் கீழே - ஹம்சதூளிகா தல்பத் தின்கீழே, சங்கம் - ஸமூஹமாய், இருப்பார்போல் - இருக்கிற வர்களைப்போலே, வந்து - எல்லாரும் வந்து, தலைப்பெய்

தோம் - கிட்டப்பெற்றோம்; கிங்கிணி - தலங்கைபோலே, வாய்ச்செய்த - விகஸிதமான, தாமரைப் பூப்போல - தாமரைப் புஷ்பத்தைப்போலே, செங்கண் - சிவந்திருக்கிற கண் மலர்களால், சிறுச்சிறிதே-கொஞ்சங் கொஞ்சமாக, எம்மேல், எங்கள்மேலே, விழியாவோ - கடாக்ஷிக்கிறதில்லையோ? திங்களும் - சந்திரனும், ஆதித்தியனும் - சூர்யனும், எழுந்தாற்போல் - உதயமானாப்போலே, அம் - அழகான, கண் - திருக்கண் மலர் இரண்டுங்கொண்டு - இரண்டையுங்கொண்டு, எங்கள்மேல் - எங்களுடைய விஷயத்தில், நோக்குதியேல் - கடாக்ஷிப்பாயாகில், எங்கள் மேல்சாபம் - எங்களைப் பற்றியிருக்கிற பாபங்கள், இழிந்துந சித்துப்போம்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய்எமது நோன்பு முடிகிறது.

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாவுன்
கோயில்நின் றும் இங்ஙனே போந்தருளிகோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (23)

(ப-ரை.) மாரி - வர்ஷாகாலத்தில், மலை - பர்வதத்தினுடைய, முழைஞ்சில் - பிலத்திலே, மன்னி - நித்யாவாசம் பண்ணி, கிடந்து - படுத்துக்கொண்டு, உறங்கும் - நித்திரிக்கிற சீரிய - ச்ரேஷ்டமான, சிங்கம் - ஸிம்ஹம், அறிவுற்று தெளிவுற்றெழுந்திருந்து, தீவிழித்து - கோபாக்னி ஜ்வலிக்கக் கண்களைத் திறந்து, வேரிமயிர் - உசிதகந்தமுடைய மயிர்களானது, பொங்க - ஊர்த்துவமாக வெழுப்ப, எப்பாடும் நாலுபக்கமும், பேர்ந்து - உடலசைந்து, உதறி - அவயவங்களை உதறிக்கொண்டு, மூரி, நிமிர்ந்து - தீர்க்கமாக உடம்பு முறித்து, முழங்கி - ஸிம்ஹ நாதம்பண்ணி, புறப்பட்டு - பிலத்வாரத்திலிருந்து புறப்பட்டு, போதாருமாபோலே - வருகிறது

போலே, நீ - நீயும், பூவைப்பூ - அதஸீகுஸுமஸத்ருசமான, வண்ணா - காந்தியுடையவனே, உன் - தேவரீருடைய, கோயில்நின்று - திருமாளிகையிலிருந்து, இங்ஙனே - இவ்வளவும், போந்தருளி - எழுந்தருளி, கோப்புடைய - ஜயசீலமான சீரிய சிங்காசனத்திலிருந்து - ச்ரேஷ்டமான ஸிம்ஹாசனத்திலிருந்து கொண்டு, யாம் - நாங்கள், வந்த - வந்திருக்கிற, காரியம் - காரியத்தை, ஆராய்ந்து - விசாரித்து, அருள் - க்ருபைபண்ணவேணும், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் எமது நோன்பு முடிகிறது.

அன்றிவ் வுலக மளந்தாய் யடிபோற்றி
 சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
 கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
 வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
 இன்றுயாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய். (24)

(ப-ரை.) அன்று - வாமனாவதார காலத்திலே, இவ்வுலகம் - இந்த லோகங்களை, அளந்தாய் - அளவிட்ட உன்னுடைய, அடி - திருவடிகளுக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; சென்று - தண்டயாத்திரை பண்ணி, அங்கு அவ்விடத்திலே, தென்னிலங்கை - தர்ஸிநீயமான இலங்கையை, செற்றாய் - அராக்ஷஸமாகப் பண்ணின தேவரீருடைய, திறல் பாஹு பலத்துக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; பொன்ற - நாசமபம்படி, சகடம் - ஸகடாஸுரனை, உதைத்தாய் - திருவடிகளால் உதைத்தான், புகழ் - பரபிலா ஸமர்யத்துக்கு, போற்றி - மங்களமாகக்கடவது; கன்று - கன்றாய் வந்த வத்ஸாஸுரனை, குணிலா - எறிதடியாக, எறிந்தாய் வீசினவனே, கழல் - திருவடிகளுக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; குன்று - பர்வதத்தை, குடையாய் சத்ரமாக, எடுத்தாய்ஏந்தின உன்னுடைய, குணம் - குணத்துக்கு, போற்றி

மங்களமாகக் கடவது; வென்று – ஜயித்து, பகை – சத்ருக் களை, செடுக்கும் - ஸம்ஹரிக்கிற, நின் - தேவரீருடைய, கையில் - ஸ்ரீ ஹஸ்தத்திலே யிருக்கிற, வேல் – ஆயுதத்துக்கு போற்றி - மங்களமாகக் கடவது; என்றென்று - அநவரதமும், உன் - தேவரீருடைய, சேவகமே - பராக்ரமமே, ஏத்தி ஸ்தோத்திரம் பண்ணி, பறைகொள்வான் - ப்ராப்யத்தை லபிக்கும் படியாக, இன்று - இன்றைக்கும், யாம் – நாங்கள், வந்தோம் - வந்திருக்கின்றோம். இரங்கு - க்ருபைபண்ணு, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித் தான்றீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

(ப - ரை.) ஒருத்தி மகனாய் - அத்விதீயையான தேவகீ தேவிக்குப் புத்திரனாய், பிறந்து - அவதரித்து, ஓரிரவில் - ஒரு ராத்திரியிலே, ஒருத்தி மகனாய் - அசோதைப் பிராட்டிக் கும் குமாரனாய், ஒளித்து- மறைத்து, வளர-வ்ருத்தியடையா நிற்க, தரிக்கிலானாகி - பொறுக்க மாட்டாதவனாய், தான் தீங்கு நினைந்த - தான் த்ரோஹத்தை நினைத்த, கருத்தை- அபிப்ராயத்தை, பிழைப்பித்து - நசிப்பித்து, கஞ்சன் - கம்ஸ னுடைய, வயிற்றில் - கர்ப்பத்திலே, நெருப்பென்ன - நெருப் பென்னும்படியாக, நின்ற - எழுந்தருளியிருந்த, நெடுமாலே- வ்யாமோஹத்தை யுடையவனே, உனை - தேவரீரை, அருத்தித்து - அர்த்தித்து, வந்தோம்-வந்திருக்கிறோம்; பறை தருதியாகில் - ப்ராப்யத்தைத் தந்தாயாகில், திருத்தக்க - உன்னுடைய விக்ரஹாநுபவம் பண்ணத்தக்க, செல்வமும்-

ஸம்பத்தையும், சேவகமும் - பராக்ரமத்தையும், யாம் - நாங்கள், பாடி - கீர்த்தித்து, வருத்தமும் தீர்ந்து - எங்களுடைய விசனமும் தீர்ந்து, மகிழ்ந்து - ஸ்ந்தோஷிக்கிறோம்; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையாய் அருளேலோ ரெம்பாவாய். (26)

(ப - ரை.) மாலே-ஆஸ்ரிதவியாமோனாய், மணிவண்ணா நீலரத்நம்போன்ற வடிவையுடையவனாய், மார்கழி நீராடுவான் - மார்கழி நீராடுகைக்கு, மேலையார்-பெரியோர்கள், செய்வனகள் - செய்யுங்கார்யங்கள், வேண்டுவன - வேண்டினவை, கேட்டியேல் - கேட்பாயாகில், ஞாலத்தை யெல்லாம் - பூமியெல்லாம், நடுங்க - அதிரும்படி, முரல்வன - கோஷிக்கும், பாலன்ன வண்ணத்து - பாலுக்கொப்பான வர்ணத்தையுடைய, உன்- தேவரீருடைய, பாஞ்சசன்னியமே போல்வன - ஸ்ரீபாஞ்ச ஜந்யத்துக்கு ஸத்ருசமான, சங்கங்கள் - சங்கங்கள், போய்ப்பாடுடையனவே - விஸ்தாரகர்ப்பமுற்றதுகளாயும், சால - ச்லாயக்மான, பெரும் - பெரிதான, பறையே - வாத்ய விசேஷமும், பல்லாண்டிசைப்பரே - மங்களாசாஸநம் பண்ணுவார்களும், கோலவிளக்கே - மங்களதீபமும், கொடிய - த்வஜமும், விதானமே – மேல்கட்டியும், ஆலினிலையாய் - வடபத்ரசாயியான ஸர்வேஸ்வரனே! அருள் – க்ருபைபண்ணு, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நேன்பு முடிகிறது.

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைப் பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட, நெய்பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

(ப - ரை.) கூடாரை - சத்துருக்களை, வெல்லும் - ஜயிக்கிற, சீர் - கல்யாணகுணங்களையுடைய, கோவிந்தா - கோரக்ஷகனானவனே, உன்தன்னை - தேவரீரை, பாடி - ஸ்தோத்ரம்பண்ணி, பறைகொண்டு - ப்ராப்யத்தைலபித்து, யாம் - நாங்கள், பெறு - லபிக்கிற சம்மானம் - ஸந்மாநங்கள், நாடு - லோகத்தார், புகழும் - கீர்த்திக்கிற, பரிசினால் - பஹுமாநத்தால், நன்றாக - செவ்வையாக, சூடகமே - கைகளுக்கிடும் ஆபரணமும், தோள்வளையே - தோளுக்கிடும் ஆபரணமும், தோடே - காதுக்கிடும் ஆபரணங்களும், செவிப்பூவே - கர்ணபுஷ்பமும், பாடகமே - சரண ஆபரணங்களும், என்றனைய - என்று சொல்லப்படுகிற, பல் கலனும் - பஹுவிதாபரணங்களும், யாமணியோம் - நாங்கள் தரிக்கக் கடவோம், ஆடை - வஸ்திரங்களை, உடுப்போம் - உடுக்கக் கடவோம்; அதன் பின்னே - அதற்குமேல், பால்சோறு - பாலும் ஸாதமும், மூட - முழுகும்படி, நெய்பெய்து - நெய் பரிமாறி, முழங்கைவழிவார - முழங்கையால் வழியும்படியாக, கூடியிருந்து - எல்லாரும் கூடியிருந்து கொண்டு, குளிர்ந்து - ஸுகிக்கவேணும்; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்தன்னோடு

உறவேல் நமக்கு இங்குஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறியரு ளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

(ப-ரை.) கறவைகள் - பசுக்களுடைய, பின் சென்று - பின்தொடர்ந்து, கானம் - காடு, சேர்ந்து - ப்ரவேசித்து. உண்போம் - தேஹயாத்திரை பண்ணிக்கொள்வோம்; அறிவு - ஜ்ஞாநம், ஒன்றும் - அற்பமும், இல்லாத - இல்லாத யாங்கள், ஆய்க்குலத்து - ஆயர்குலத்துதித்த, உன்றன்னை - தேவரீரை, பிறவி பெறுந்தனை - பிறப்பாக லபித்த, புண்ணியம் - உபாயம், யாம் - நாங்கள், உடையோம் - உண்டானவர்கள்; குறைவு - மனக்குறைவு, ஒன்றும் - அற்பமும், இல்லாத - இல்லாதிருக்கிற, கோவிந்தா - ஸ்ரீ கிருஷ்ணனே! உன்தன்னோடு-தேவரீரோடு, உறவேல் சம்பந்தம், நமக்கும்-இவர்க்கும், இங்கு - இவ் விடத்திலே, ஒழிக்க ஒழியாது - போக்கடிக்கப் போகாது, அறியாத - ஞானசூனியரான, பிள்ளைகளோம் - சென்பிள்ளைகள், அன்பினால் - ப்ரேமத்தால், உன் தன்னை - தேவரீரை, சிறுபேர் - சிறியபேரால், அழைத்தனவும் - அழைத்ததற்கு, சீறியருளாதே கோபியாதே கொள்ளாய்; இறை - ஸ்வாமி! நீ - தேவரீர், தாராய்-ப்ரஸாதித்தருளாய், பறை - ப்ராப்யத்தை. ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக்கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

(ப - ரை.) சிற்றஞ்சிறுகாலே - அத்யந்தம் ப்ராதக் காலத்தில், வந்து - எல்லாரும் வந்து, உன்னை - தேவரீரை, சேவித்து - ஸேவித்து, உன் - தேவரீருடைய, பொற்றாமரை - ஸப்ருஹணீயமான தாமரை போலேயிருக்கிற, அடியே - திருவடிகளை, போற்றும் - மங்களாசாஸநம் பண்ணுகிற, பொருள் - அபிப்ராயம், கேளாய் - கேளும்; பெற்றம் - பசுக்களை, மேய்த்து - ரக்ஷித்து, உண்ணும் - பஜிக்கிற, குலத்தில் - குலத்திலே, பிறந்து - திருவவதரித்து, நீ - தேவரீர், குற்றேவல் - அந்தரங்க கைங்கர்யம், எங்களை - அடியோங்களை, கொள்ளாமல் - அங்கீகரியாமல், போகாது - போகப்படாது; இற்றைப்பறைகொள்வான் - இந்த வாத்ய விசேஷம் கொள்ளுமவர்கள், அன்று காண் - அன்று காணும், கோவிந்தா - கோரக்ஷகனே! எற்றைக்கும் - என்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும் - இருபத்தொரு ஜன்மங்களிலும், உன்தன்னோடு - உன்னோடு, உற்றோமேயாவோம். அநந்யார்ஹராயிருக்க வேணும்; உனக்கே நாம் - தேவரீருக்கே நாங்கள், ஆட்செய்வோம் - பணிவிடை செய்ய வேணும்; மற்றை - வேறு விஷயத்தில் செல்லும் எமது, காமங்கள் - இச்சைகளை, மாற்று - மாற்றிவிட வேணும்; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவா - எமது நோன்பு இனிது முடிகிறது.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்டவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல்பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய்.

(ப - ரை.) வங்கக்கடல் கடைந்த - கப்பல்களை யுடைத்தான திருப்பாற்கடலைக் கடைந்தமுதந் தந்தருளின. மாதவனை - ஸ்ரீய: பதியான, கேசவனை - கண்ணனை, திங்கள் திருமுகத்து - சந்திரனைப் போன்ற திருமுகத்தையுடைய

ராய், சேயிழையார் - ஆய்ந்த ஆபரணங்களையுடைய பெண்கள், சென்றிறைஞ்சி-போய் மங்களாசாஸனம் பண்ணி அங்கு அப்பறை கொண்ட ஆற்றை - திருவாய்ப்பாடியிலே அப்பறைகொண்ட விதத்தை, அணிபுதுவை - அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூர், பைங்கமலம்தண் - பசுமையான குளிர்ந்த தாமரைப் புஷ்பங்களாலாகிய, தெரியல் - மாலையையுடைய, பட்டர்பிரான் - ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாருடைய, கோதை - திருமகளான ஆண்டாள், சொன்ன - அருளிச்செய்த. சங்கம் - சங்கமான, தமிழ்மாலை – த்ராவிட பாஷையான மாலையை, முப்பதும் - முப்பது பாட்டும், தப்பாமே - தப்பாமல், இங்கு - இந்தப் பூமியிலே, இப்பரிசு- இந்த ப்ரகாரத்தை, உரைப்பார் - அநுசந்தித்தவர்கள், ஈரிரண்டு - நாலாகிய, மால் - பெரிய, வரை - பர்வதங்களைப் போலே யிருக்கிற, தோள் - புஜங்களையும், செம்-சிவந்திருக்கிற, கண் - திருக்கண்களையும், திருமுகத்து - திருமுக மண்டலத்தையுமுடைய, செல்வ - உபய விபூதிநாயகராகிய, திருமாலால் - ஸ்ரீய: பதியாலே, எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், திருவருள் - ஒப்பற்ற கிருபையை, பெற்று - லபித்து, இன்புறுவர் - ப்ரஹ்மாநந்தயுக்தராயிருப்பார்கள், ஏல்ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

சூடிக்கொடுத்த நாச்சியார் திருவடிகளே சரணம்

திருப்பாவை முற்றிற்று

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்